சுருக்கம்

பள்ளிக் கல்வி – அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6, 7 மற்றும் 8ம் வகுப்புகளுக்கு அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட 7979 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.04.2016 முதல் 31.03.2017 வரை தொடர் நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (அகஇ) துறை

அரசாணை (1டி) எண் 180

நாள் 05.05.2016
திருவள்ளுவர் ஆண்டு 2047
சித்திரை 22

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.175, பள்ளிக் கல்வித் துறை, நாள் 18.9.2006.
2. அரசாணை (1டி) எண்.19, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20.1.2016.
3. பள்ளிக் கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண்.011617/எல்/இ3/2016, நாள் 28.03.2015.

*********

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6, 7 மற்றும் 8ம் வகுப்புகளுக்கு 1 : 40 என்ற ஆசிரியர் மாணவர் விகிதப்படி கூடுதலாகத் தேவைப்படும் 7979 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் முறையான ஊதிய விகிதத்தில் தோற்றுவித்தும், மேலும் இப்புதிய பணியிடங்களுக்கான கூடுதல் செலவினம் அனைவருக்கும் கல்வி இயக்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. இப்பட்டதாரி ஆசிரியர் தற்காலிக பணியிடங்களுக்கு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கடைசியாக 1.4.2015 முதல் 31.3.2016 முடிய மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கும் தொடர் நீட்டிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்டு, மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் 1.4.2015 முதல் தொடர் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ள 7979 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு காலம் 31.3.2016 உடன் முடிவடைவதால் அப்பணியிடங்களுக்கு 1.4.2016 முதல் மேலும் ஐந்தாண்டு காலத்திற்கு தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கிடுமாறு அரசினை வேண்டியுள்ளார். மேலும் அப்பணியிடங்களுக்கான செலவினம் உடனுக்குடன் அனைவருக்கும் கல்வித் திட்டத்திலிருந்து ஈடுசெய்யப்பட்டு உரிய கணக்கு தலைப்பில் வரவு வைக்கப்படுகிறது எனவும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.9300–34800 + தரஊதியம் ரூ.4600 என்ற ஊதிய விகிதத்தில் தோற்றுவிக்கப்பட்ட 7979 தற்காலிக பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 1.4.2016 முதல் 31.3.2017 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித் துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அது வரை தொடர் நீட்டிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் தொடர்நீட்டிப்பு அனுமதிக்கப்பட்டுள்ள 7979 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களின் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது – AZ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுத்தல் – 01 சம்பளங்கள்."

(த.தொ.கு 2202–02–109–AZ–0108)

5. அனைவருக்கும் கல்வி திட்ட நிதி மாநில அரசுக் கணக்கின் வழியாக விடுவிக்கப்படும் வரை இச்செலவினமானது, அனைவருக்கும் கல்வி திட்டத்திலிருந்து உடனுக்குடன் ஈடு செய்யப்பட்டு, கீழ்க்கண்ட கணக்கு தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும் :–

"0202 கல்வி போட்டி விளையாட்டுகள் கலையும் பண்பாடும் – 01 பொதுக் கல்வி – 102 இடைநிலைக் கல்வி – AK அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு தொகை வழங்குவதற்கான வரவினங்கள்."

(த.தொ.கு 2202–01–102–AK–0001)

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.26061/கல்வி-II/2016, நாள் 29.4.2016ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை–18/35.

<u>நகல்</u>

நிதித் (கல்வி–II/பி.ஜி–I/பி.ஜி–II/
வரவு செலவு (பொது–II) ) துறை, சென்னை–9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வி (வரவு செலவு) துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 6/5/16